# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No.157/2018**

Prosecution witness : 1

| | |
|---|---|
| Name: Kannan | Caste: |
| Father'sName: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

Accused present

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 01.09.2025

**முதல் விசாரணை**:

நான் தற்போது கீரைத்துறை குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 09.12.2016ம் ஆண்டு அவனியாபுரம் காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது திரு.அழகுமுத்து-சார்பு ஆய்வாளர், 332-ரமேஷ், தலைமைக்காவலர் ஆகியோருடன் சரக ரோந்து செய்தபோது அவனியாபுரம் வெற்றி தியேட்டர் பின் புறம் உள்ள கால்வாய் அருகில் இருசக்கரவாகனத்தில் ஒரு கட்டப்பையை மடியில் வைத்துக்கொண்டு புளூ கலர் சுசுகி இருசக்கரவாகனத்தில் (TN 59 R 5546) வந்தவர் போலீஸ்பார்ட்டியை கண்டதும் ஓட எத்தனித்தவரை மடக்கி பிடித்து விசாரித்தபோது பெயர்-ராமகிருஷ்ணன், வயது -36, த/பெ.கருப்பையா, வில்லாபுரம் கிழக்கு தெரு, மாயழகு காம்பவுண்ட், மதுரை என்று கூறியவரை மின் விளக்கு ஒளி வெளிச்சத்திலும், டார்ச் வெளிச்சத்திலும் சார்பு ஆய்வாளர் -அழகு முத்து அவர்கள் உன்னிடம் மனித உயிருக்கு கேடு விளைவிக்கக்கூடிய அரசால் தடைசெய்யப்பட்ட போதைப்பொருள் இருப்பதாக சந்தேகப்படுகிறேன். உன்னை நீதிமன்ற நடுவரிடமோ அல்லது அரசால் பதிவு செய்யப்பட்ட அதிகாரியிடமோ கூட்டி செல்லவா அல்லது நானே சோதனையிடவா என்று கேட்டார். அதற்கு தாங்களே சோதனை இடலாம் என்று 20.45 மணிக்கு சம்மதக்கடிதம் கொடுத்தார். மேற்படி ராமகிருஷ்ணன் வைத்திருந்த ஆரஞ்சு கலர்,

தங்கள் வருகைக்கு நன்றி என்ற கட்டைப்பையை சோதனையிட அதில் 1கிலோ 250கிராம் கஞ்சா பொட்டலம் இருந்தது. அதில் 100 கிராம் சோதனைக்காக நியூஸ்பேப்பரில் மடித்து மீதம் இருந்த 1100 கிராம் கஞ்சாவை மற்றொரு நியூஸ்பேப்பரில் மடித்து கட்டி போலீஸ்பட்டன் சீல் வைத்து 21.15 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றி ராமகிருஷ்ணனிடம் எங்கள் முன்னிலையில் கையெழுத்து போட்டோம். பிறகு ராமகிருஷ்ணனிடம் கைதுக்கான காரணம் கூறி 21.45 மணிக்கு சார்பு ஆய்வாளர் கைது செய்தார்கள். மேற்படி ராமகிருஷ்ணனை விசாரிக்க 09.12.2016 அன்று காலை வருஷநாடு சென்று இனம் தெரியாத நபரிடம் 1கிலோ 250கிராம் கஞ்சாவை வாங்கி வந்து வெற்றி தியேட்டர் பின் புறம் வைத்து விற்கலாம் என்றிருந்தபோது தாங்கள் என்னை இருசக்கரவாகனத்துடன் என்னை பிடித்தீர்கள் என்று கூறினார். பின்பு அவரையும் கைப்பற்றப்பட்ட பொருளையும் இருசக்கரவாகனத்தையும் 23.00 மணிக்கு நிலையம் கொண்டுவந்து அவனியாபுரம் காவல்நிலைய குற்றஎண்.2396/2016, ச/பி.8(c) r/w20(b)(ii)(B)NDPS ACT ன் படி வழக்கு பதிவு செய்தார்கள். இது தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். அத்தாட்சி அ.சா.ஆ. 1 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.